**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.211/2021**
**Prosecution Witness :10**

| | | | |
|---|---|---|---|
| Name | :டாக்டர். பக்ரூதின் | Caste | : |
| Father 's Name / Husband Name | : சலீம்கான் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(23.02.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது திருப்பரங்குன்றம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகின்றேன். கடந்த 13.03.2021ம் தேதி இரவு 11.10 மணிக்கு நான் பணியிலிருந்த போது சிவரக்கோட்டை சேர்ந்த சோனை என்பவரின் மனைவி கார்த்திஸ்வரி என்பவரை அனுமதித்து முதல் சிகிச்சை செய்தேன். அவரை அடையாளம் தெரிந்த 3 நபர்கள் தாக்கியதாக சொன்னார். வயிற்றில் அவர்கள் உதைத்த போது அதிக உதிரபோக்கு ஏற்பட்டதாக சொன்னார். மேல் சிகிச்சைக்காகவும் பெண் மருத்துவர் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்து அனுப்பிவைத்தேன். மேற்படி கார்த்திஸ்வரிக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்றுவழங்கினேன். **அந்த விபத்துசான்று மற்றும் காயச்சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தனர்.
**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**.

எத்தனை மணிக்கு சண்டை நடந்த விபரத்தை காயம்பட்டவர் என்னிடம் சொன்னாரா என்றால் சொன்னார். 3.10 க்கு சம்பவம் நடந்ததாக சொன்னார். அடையாளம் தெரிந்த நபர்கள் தான் அடித்ததாக சொன்னார். குறிப்பிட்டு சொல்லவில்லை. 3.10 மணி முதல் 11.10 மணி வரை வேறு எங்கேயாவது காயம்பட்டவர் சிகிச்சை எடுத்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வெளிப்படையான காயம் ஏதும் இருந்ததா என்றால் இல்லை. காயம்பட்டவருக்கு மென்சஸ் டைம் இருந்ததால் கூட அதிக உதிரபோக்கு இருந்திருக்கலாம் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**. இல்லை